IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, SANKARI

**SC.No.**178/2022 **Date**: 05.02.2025.

அ.சா.2-விவேகானந்தன்

சாட்சி மனுவின் பெயரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

மேஸ்திரிகாட்டிலிருந்து சண்டை நடந்த இடம் 200 அடி தூரத்திலுள்ளது. என் தாத்தா பெயர் முத்துகவுண்டர். என் வீட்டின் கதவு எண்.6/1. சம்பவ இடத்திற்கு வடபுறம் விவசாய நிலம் தான் உள்ளது என்றால் சரிதான். மேஸ்திரி காட்டை ஒட்டி செல்லும் தார் ரோடு வி.என்.பாளையம் வரை செல்கிறது என்றால் சரிதான். தார்ரோட்டிற்கு மேற்கில் எனக்கு விவசாய நிலமுள்ளது. தார்ரோட்டிற்கு கிழக்கிலும் மேற்கிலும் உள்ள என் நிலத்தில் எனக்கு வீடு இல்லை. மேற்புற நிலத்திற்கு தெற்கில் சுமார் 200 அடி தூரத்தில் என் வீடு உள்ளது. சம்பவத்தின் போது என் நிலத்தில் பயிறு எதுவும் இல்லை என்றால் சரிதான். சண்டை நடந்த நிலம் 40 செண்ட் இருக்கும். அதில் யூக்ளிப்டஸ் மரங்களும் தென்னை மரங்களும் உள்ளது. சம்பவதன்று தோட்டத்திற்கு நான் மட்டும் தான் சென்றேன். அந்த 40 செண்ட் நிலத்தை தான் கீதா என்பவர் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் கிரையம் ஆனது எனக்கு தெரியும். ஆனால் கிரையம் வாங்கியவர் பெயர் எனக்கு தெரியாது. பெரிய முத்தாகவுண்டர் என்பவர் என் தாத்தா. அவர் நிலத்திற்கு தெற்கில் தான் 40 செண்ட் நிலமுள்ளது. மேற்படி பூமியின் ச.எண்.290 என்றால் சரிதான். அந்த நிலத்தை கீதா விலைக்கு வாங்கி வீடு கட்டி மின் இணைப்பு பெற்றார் என்றால் அதற்கு முன்பே வீடு உள்ளது. மேற்படி நிலத்தில் 15 வருடங்களாக வீடு உள்ளது. அந்த வீட்டை தான் நான் ரத்தினவேலுவின் வீடு என்று சொல்கிறேன். அந்த வீட்டிற்கு வடக்கு பார்த்த வாசல். வீட்டின் கதவு எண் தெரியாது. அந்த வீட்டில் தான் ரத்தினவேலுவும், குடும்பத்தாரும் 15 ஆண்டுகளாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த இடம் சம்பந்தமாக எதிரிகளுக்கும். ரத்தினவேலுவிற்கும் தகராறு இருந்தது இல்லை என்றால் சரியல்ல. என்ன தகராறு என்றால் அந்த நிலத்தை பாகம் பிரித்து

கொடுக்குமாறு கேட்டு குமாரசாமி தகராறு செய்து வந்தார். நான் போலீஸ் விசாரணையின் போது ரத்தினவேல் பாகக்கறார் செய்யாத 40 செண்ட் நிலத்தில் வீடு கட்டியுள்ளார் என்று சொல்லியுள்ளேன். வழக்கு சம்பவம் சுமார் 5 நிமிடங்கள் நடந்திருக்கும். சம்பவத்தின் போது ரத்தினவேலுவிற்கு காயப்பட்டு சட்டை முழுவதும் இரத்தமாகிவிட்டது என்றால் சரிதான். ரத்தினவேலு மகனை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வர சொன்னேன் என்று நான் போலீஸ் விசாரணையின் போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. கீழே விழுந்துகிடந்த ரத்தினவேலுவை நானும், அ.சா.3 லோகநாதனும் தூக்கி உட்கார வைத்தோம் என்றால் சரிதான். ரத்தினவேலுவிற்கு கத்தி குத்துபட்டு இடது பக்க வயிறு, வலது மார்பு ஆகிய இடங்களில் காயமாகி இரத்தம் தரையிலும் சிந்தியது, தூக்கும் போது எங்களது உடையிலும் இரத்தக்கறை படிந்தது என்றால் சரிதான். ரத்தினவேலுவை சுமார் 20 முதல் 30 நிமிடம் அங்கு உட்கார வைத்திருந்தோம். ரத்தினவேலுவை உடனடியாக மருத்துவமனைக்கு அழைத்து செல்ல நாங்கள் முயற்சி செய்யவில்லை என்றால் சரியல்ல. அவரது மகன் வரட்டும் என்று இருந்தோம். 108 ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லவில்லை. மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்த போது நேரம் காலை சுமார் 11.30 முதல் 12.00 இருக்கலாம். அரசு மருத்துவமனையிலிருந்து சங்ககிரி காவல் நிலையம் 1 கி.மீ தொலைவிலுள்ளது. நடந்து சென்றால் 5 நிமிடத்தில் செல்ல முடியும் என்றால் சரியல்ல. மருத்துவருக்கு தினேசும், ரத்தினவேலுவும் தகவல் சொன்னார்கள். எவ்வளவு நேரத்தில் போலீசார் வந்தார்கள் என்றால் நான் பதற்றத்தில் இருந்ததால் சரியான நேரம் தெரியவில்லை சுமார் 15 நிமிடங்கள் இருக்கலாம். அப்போது என்னை போலீஸ் விசாரிக்கவில்லை. போலீசார் வரும் வரை நான் மருத்துவமனையில் தான் இருந்தேன். அன்று மாலை என்னை வீட்டில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். நான் சம்பவ இடத்தையும், இரத்தம் படிந்த இடத்தையும் போலீசாருக்கு காண்பித்தேன். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். ரத்தினவேலுவின் வீட்டின் கதவு எண்ணை போலீசார் குறித்து கொண்டார்களா

என்றால் இல்லை. அந்த வீட்டிற்கு முன்னால் சுமார் 15 அடி தூரத்தில் இருந்த இரத்தம் படிந்த இடத்தை காண்பித்தேன். வீட்டின் வாசல் படியிலிருந்து மேற்கில் அந்த இடம் உள்ளது. இரத்தம் படிந்த மண்ணை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் நான் அதை பார்க்கவில்லை. எதிரிகள் நான் சொன்னது போல் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சொன்ன நேரத்தில் ரத்தினவேலுவை கெட்ட வார்த்தையால் திட்டி கத்தியால் குத்தவில்லை என்றாலும், அது போன்ற சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் ரத்தினவேலுவிற்கு அங்கு நிலமும் வீடும் எப்போதும் இருந்தது இல்லை என்றால் சரியல்ல. ரத்தினவேலு குமாரசாமியின் நிலத்தை அபகரிப்பதற்காக தன்னுடைய பண பலம் போலீஸ் பலத்தை வைத்து பொய்யான வழக்கை உருவாக்கினார் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் எ.சா.ஆ.1. நான் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/-விவேகானந்தன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.